# திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யான ஸாரம்

நஞ்சீயர் பெரியவாச்சான் பிள்ளை
வ்யாக்யானங்களிலிருந்து திரட்டியது

## அவதாரிகை

காலம் காலமாக ஆழ்வார் அஜ்ஞான மாயையில் உறங்கி ("அநாதி$_3$மாயயா ஸுப்தோ யத$_3$ா ஜீவ: ப்ரபு$_3$த்$_4$யதே"), தம்முடைய ஸ்வரூபத்தையோ உபாயத்தையோ புருஷார்த்தத்தையோ அறியாமல் தம்முடைய தேகத்தையே ஆத்மா என்று கருதி இவ்வுலக விஷயங்களில் ஈடுபட்டு, தன்னைச் சேர்ந்தவரையும் தம் நிலைக்கே ஆளாக்கி இருந்தார். அப்போது பெரிய பெருமாள் தன்னுடைய காரணமற்ற கருணையினால் அவருக்குத் தன் அழகைக் காட்டி ("மாதராற்கயற்கணென்னும் வலையுள் பட்டழுந்துவேனைப் போதரேயென்று சொல்லிப் புந்தியிற் புகுந்து தன்பாலாதாரம் பெருகவைத்த அழகன்"), அவருக்கு மற்றைய விஷயங்களில் இருந்த ஈடுபாட்டை மாற்றி அவருடைய உண்மையான ஸ்வரூபத்தை அவருக்கு உணர்த்தி தம்மிடம் ஈடுபடச் செய்தார். அப்படி எழுந்த ஆழ்வார் மூலமாக, பெரிய பெருமாள் உபாய உபேயங்கள் தானே என்பதை உலகத்துக்குத் தெரிவித்துப் ("ஐம்புலனகத்தடக்கிக் காம்பறத் தலை சிரைத்துன் கடைத்தலையிருந்து வாழும் சோம்பரையுகத்தி") பின் கவலையற்று கண்வளர்ந்தார். அப்படி உறங்கும் பெரிய பெருமாளை எழுப்ப இப்ப்ரபந்தத்தை ஆழ்வார் பாடி அவரிடம் அடிமை செய்ய முற்படுகிறார்.

அப்படி உபாய உபேயங்கள் அவனே என்று நிச்சயித்தால் பிறகு அவனை எழுப்புவதும், அவன் அழகைப் பாடுவதும், அவனுக்கு திருமாலை முதலான கைங்கர்யங்கள் செய்வதையும் இச்சித்து அவற்றைச் செய்வதே பொருத்தமாகும். இதையே தான் ஆண்டாளும் "மாரிமலை முழைஞ்சில்" என்னும் பாசுரத்தில் அநுஸந்தித்தாள். நம்மாழ்வாரும் "நெடுமாற்கடிமையில்" அடையும் பொருளில் இறுதியான ஆசார்ய கைங்கர்யத்தைச் சொல்லி, "கொண்ட பெண்டிர்" பாசுரத்தில் உலகத்துக்கு வழியை உபதேசித்துப் பின் "கிடந்த நாள் கிடந்தாய்" என்னும் பாசுரத்தில் எம்பெருமானைப் பள்ளியெழுப்பி அடிமை செய்ய முற்பட்டார். விஸ்வாமித்ர முனிவரும் "கௌஸல்யா ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்$_4$யா ப்ரவர்த்ததே | உத்திஷ்$_2$ட$_2$ நரஷார்தூ$_3$ல கர்த்தவ்யம் தை$_3$வமாஹ்நிகம் ||" என்று அவனை துயிலெழச் செய்தார். அதைப் போலவே இவ்வாழ்வாரும் அவன் பள்ளியுணரும் பெரும் அழகைக் கண்டு அடிமை செய்ய ஆசைப்பட்டு இப்ப்ரபந்தத்தைப் பாடுகிறார்.

அப்படி உகப்பான கைங்கர்யத்தை பெரிய பெருமாள் திருவடிகளில்

ப்ரார்த்திக்கச் சென்ற அளவில் அவரை கை நீட்டி அணைத்தல், விசாரித்தல், மாலைகளை வாங்கி அணிந்து கொள்ளல் முதலியவற்றைச் செய்யாமல் பள்ளி கொண்டிருந்தார் பெரிய பெருமாள்.

இதற்கு என்ன காரணம்? பெருமாளுக்கு ஆழ்வாரிடம் ஆதரவு கிடையாதா? இல்லை. ஏனென்னில் பெருமாளுக்கு இவர் ப்ரியமானவர். பெருமாளுக்கு உண்டது ஜரிக்கவில்லையா இல்லை வேறெதாவது தமோ குணத்தால் வந்த விளைவா? இல்லை. ஏனென்னில், பெருமாளுடைய திருமேனி ஸுத்த ஸத்வமாகையால். பின் எது தான் காரணம் என்னில், இவ்வுலக சம்பந்தம் பயனில்லை என்பதை "ஆதலால் பிறவி வேண்டேன்" என்றும், அவன் அடியாருக்கு அடிமை செய்ய வேண்டும் என்னும் வரையில் ஸ்வரூபஜ்ஞானம் பிறந்ததை " போனகஞ் செய்த சேடந்தருவரேல் புனிதம்" என்றும், இவ்வுலக புருஷர்களின் உண்மை ஸ்வரூபம் புரிந்ததை "இச்சுவை தவிர அச்சுவை பெறினும் வேண்டேன்" என்றும், புலன்களை வென்றதை "காவலிற்புலனை வைத்து" என்றும், மற்றைய உபாயங்களில் சம்பந்தமற்றதை " குளித்து மூன்றனலையோம்புங் குறிகொளந்தணமை தன்னை யொளித்திட்டேன்" என்றும், உபாயங்களில் உண்மை அறிவு பிறந்ததை "உன்னருளென்னுமாசைதன்னால் பொய்யனேன் வந்து நின்றேன்" என்றும் ஆழ்வார் வெளியிட, இவர் இப்படி ஆனார் என்கிற மகிழ்ச்சியாலும், இப்படி இவரை மாற்றிய தன் வைபவத்தை ("ஆத்மாநம் வாஸுதே$_3$வாக்$_2$யம் சிந்தயந்") நினைத்தும், சேதனர் அனைவரையும் இவரைப் போல் தம்மிடம் ஈடுபடச் செய்யும் வழி எது என்ற ஒரே சிந்தனையில் பள்ளி கொண்டதினால் ("நாகமிசைத்துயில்வான் போலுலகெல்லாம் நன்கொடுங்க யோகணைவான்"), இவர் வந்ததை பெரிய பெருமாள் கவனிக்கவில்லை.

புலன்களில் சிக்கி ("மாதராற் கயற்கணென்னும் வலையுட்பட்டு") இவர் கிடந்த போதில் பெருமாள் உறங்காமல் இருக்க, இவர் பெருமாளிடன் ஈடுபாடு கொண்ட பின் ("அடியரோர்க்ககலலாமே") கவலையற்று மார்பில் கைவைத்து உறங்கலானார். இவர் கைங்கர்யம் செய்வதில் வேகம் கொண்டவராய் ("எம்பிராற்காட்செய்யாதே என்செய்வான் தோன்றினேனே"", விஷ்வாமித்ரர் போலும் ("உத்திஷ்$_2$ட நரஷார்தூ$_3$ல"), சீதா பிராட்டியைப் போலும் ("ஸ மயா பே$_3$ாதி$_4$த: ஸ்ரீமாந்"), ஆண்டாள் போலும் ("உம்பர் கோமானே உறங்காதெழுந்திராய்"), அவரைத் துயிலெழுப்பி ("அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே"), ஆண்டாள் போலே ("உனக்கே நாமாட்செய்வோம்") கைங்கர்ய எல்லையான பாகவத கைங்கர்யம் வரை ("தொண்டரடிப்பொடியென்னுமடியனை அளியனென்றருளி உன்னடியார்க்காட்படுத்தாய்") ப்ரார்த்திக்கிறார்.

இப்படி அவரை துயிலெழுப்ப காரணமென்னவென்றால், கைங்கர்யத்தின்

உண்மைப் பொருளை அறிந்தவர் ஆகையால் ("ஆம்பரிசறிந்து கொண்டு"). அது என்னவென்னில், எல்லா இடங்களிலும் எல்லா காலங்களிலும் எல்லா நிலைகளிலும் எல்லாவித கைங்கர்யங்களையும் செய்யும் போது ("அஹம் ஸர்வம் கரிஷ்$_2$யாமி ஜாக்ரத: ஸ்வபதஷ்ச தே", "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி"), அவன் உகந்த கைங்கர்யங்களையே செய்ய வேண்டும் ("தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே"). அப்படி செய்யுமிடத்தில் அவன் ஏவிச் செய்யும் பணிகளையே செய்ய வேண்டும் என்று இவர் இருப்பதால் ("க்ரியதாமிதி மாம் வத$_3$", "எனக்கேயாட்செய்", "முகப்பேகூவிப் பணிகொள்வாய்"), பொழுது விடிந்து விட்டதற்கான அறிகுறிகளைச் சொல்லி அவனைத் துயில் எழுப்புகிறார்.

ஸூரியன் உதயகிரியில் வந்து தோன்றினான்; திருவாராதனத்துக்குத் தேவையான பொருட்களைக் கொண்டு தேவர்களும், அரசர்களும், பக்தர்களும் திருக்கண்ணுக்கு இலக்காகும்படி தென்திசையில் முதல் கடாக்ஷத்துக்காக முந்தி நின்றார்கள்; எல்லோரையும் ரக்ஷிப்பவராய், எல்லாவற்றிற்கும் ஸ்வாமியாய், அடைந்தவர்களிடம் க்ருபை கொண்டவராய் இருக்கும் தேவரீர் உம்மை திருப்பள்ளியெழுப்பிய பெருமையை எனக்குத் தந்து திருப்பள்ளியுணர்ந்து எங்களை அடிமை கொள்ள வேண்டும் என்று ஆழ்வார் பாடுகிறார். தன் குழந்தைகளைக் காட்டி ஜீவனம் வேண்டும் என்று மன்னனைக் கேட்கும் குடிமக்களைப் போலே ஆராதனம் செய்யும் தேவர்களை முன்னிட்டுக் கொண்டு தம்முடைய பேற்றை வேண்டுகிறார்.

திருமாலையைக் காட்டிலும் திருப்பள்ளியெழுச்சிக்கு என்ன உயர்த்தி என்றால், காலம் காலமாக மாயையில் உறங்கிக் கிடந்த இவரை திருமாலயில் பெரிய பெருமாள் எழுப்பினார்; அப்படி எழுந்த இவர் தம்மிடம் உள்ள பெரும் அன்பினால் உறங்கிய அவரைத் திருப்பள்ளியெழுச்சியில் பள்ளி உணர்த்துகிறார். வாக்கால் செய்யும் கைங்கர்யத்தை இனிமையாக அவன் கொண்டதை அதில் சொன்னார் ("புன்கவிதையேலும் எம்பிராற்கினியவாறே"); உடலால் செய்யும் கைங்கர்யத்தை அவன் இனிமையாகக் கொண்டான் என்கிறார் இதில் ("தொடையொத்த துளபமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப்பொடியென்னும் அடியனை அளியனென்றருளி"). அதில் எம்பெருமானுக்கு இனிதான கைங்கர்யத்தைப் பெற்றார் ("எம்பிராற்கினியவாறே"); இதில் அவன் அடியார் உகந்த கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கிறார் ("அடியார்க்காட்படுத்தாய்"). இவரை அடைய எம்பெருமான் முயன்றதை அதில் சொன்னார்; அம்முயற்சி பலித்ததை இதில் சொன்னார். தன்னை கடாக்ஷிக்கும்படி அதில் சொன்னார் ("எளியதோரருளுமென்றே என்திறத்து"); மற்றவரை கடாக்ஷிக்கும்படி இதில் சொன்னார் ("அவர்க்கு நாளோலக்கமருள").

**நஞ்சீயர் பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே ஷரணம்**

**தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருவடிகளே ஷரணம்**